## இடைநிலைப் பள்ளி விடுப்பு சான்றிதழ் பொதுத் தேர்வு மார்ச் / ஏப்ரல் 2020

**முதன்மை விடைத்தாள் வழங்குதல் குறித்து தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகள் :-**

மார்ச் / ஏப்ரல் 2020 பருவத்தில் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை தங்கள் மையத்தில் எழுதும் தேர்வர்கள் எந்தப் பாடத்திட்டத்தில் (புதிய/பழைய பாடத்திட்டம்) எழுதுவுள்ளனர் என்பதனை முதன்மைக் கண்காணிப்பாளர் நன்கு உறுதி செய்து கொண்டு அந்தந்த பாடத்திற்கான முகப்புத் தாட்களை கீழ் கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்கப்பட்டுள்ளதை முதன்மைக் கண்காணிப்பாளர் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

| | தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முதன்மை விடைத்தாட்கள் | |
|---|---|---|
| பாடம் | புதிய பாடத்திட்டம் | பழைய பாடத்திட்டம் |
| தமிழ் | SSLC – Tamil (மார்ச் 2020 தேர்வுக்கு புதிதாக அச்சிடப்பட்ட விடைத்தாளை வழங்க வேண்டும்)<br>விடைத்தாளின் மதிப்பெண் பக்கத்தில் வினா வாரியாக மொத்தம் என்ற கலத்தில் 60 வினா எண்கள் அச்சிடப்பட்டிருக்கும்.<br>**முதன்மை விடைத்தாளில் அச்சிடப்பட்டுள்ள படிவங்கள் :–**<br>1. நூலக உறுப்பினர் படிவம்.<br>2. மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம்.<br>3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்<br>4. பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புதல். | SSLC – Tamil<br>அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் மூலம் (SSLC Tamil) முத்திரையிட்டு வழங்கப்பட்டுள்ள முதன்மை விடைத்தாள்.<br>விடைத்தாளின் மதிப்பெண் பக்கத்தில் வினா வாரியாக மொத்தம் என்ற கலத்தில் 100 வினா எண்கள் அச்சிடப்பட்டிருக்கும்.<br>**முதன்மை விடைத்தாளில் அச்சிடப்பட்டுள்ள படிவங்கள் :–**<br>1. தொடர்வண்டி இருக்கை முன்பதிவுப் படிவம் நிரப்புதல்.<br>2. வங்கி கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம்<br>3. வங்கி கணக்கில் பணம் செலுத்தும் படிவம் |
| பிறமொழிப்பாடம் (Other Language) | SSLC – Language | SSLC – Language |
| ஆங்கிலம் | SSLC – Language | SSLC – Language |
| கணிதம் மற்றும் அறிவியல் | SSLC<br>(கணிதப்பாடத்திற்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளில் கடைசி தாளுக்கு முன்னர் ஒரு வரைகட்டத்தாளை வைத்து தைக்க வேண்டும்) | SSLC<br>(கணிதப்பாடத்திற்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளில் கடைசி தாளுக்கு முன்னர் ஒரு வரைகட்டத்தாளை வைத்து தைக்க வேண்டும்) |
| விருப்ப மொழிப்பாடம் (பகுதி – IV) (Optional Language) | SSLC – Language | SSLC –Language |
| சமூக அறிவியல் | SSLC – Social Science<br>(மார்ச் 2020 தேர்வுக்கு புதிதாக அச்சிடப்பட்ட விடைத்தாளை வழங்க வேண்டும்)<br>விடைத்தாளின் மதிப்பெண் பக்கத்தில் வினா வாரியாக மொத்தம் என்ற கலத்தில் 60 வினா எண்கள் அச்சிடப்பட்டிருக்கும்.<br>**முதன்மை விடைத்தாளில் அச்சிடப்பட்டுள்ள வரைபடங்கள்:–**<br>1. இந்திய வரைபடம் –2<br>2. உலக வரைபடம் –1<br>3. தமிழ்நாடு வரைபடம் –1 | SSLC – Social Science<br>விடைத்தாளின் மதிப்பெண் பக்கத்தில் வினா வாரியாக மொத்தம் என்ற கலத்தில் 100 வினா எண்கள் அச்சிடப்பட்டிருக்கும்.<br>**முதன்மை விடைத்தாளில் அச்சிடப்பட்டுள்ள வரைபடங்கள்:–**<br>1. இந்திய வரைபடம் –2<br>2. ஐரோப்பிய வரைபடம் –1<br>3. ஆசிய வரைபடம் –1 |

..2..

புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு தமிழ் மற்றும் சமூக அறிவியல் பாடங்களுக்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாட்களில் புதிய / பழைய பாடத்திட்டத்திற்கேற்ப அச்சிடப்பட்டுள்ள படிவங்கள்/ வரைபடங்களில் மாற்றம் உள்ளன.

எனவே, முதன்மைக் கண்காணிப்பாளர்கள் இதில் எவ்வித தவறும் நேராத வண்ணம், ஒவ்வொரு பாடத்திற்கான முகப்புத் தாட்களும், அந்தந்த பாடங்களுக்கான / பாடத்திட்டத்திற்கான முதன்மை விடைத்தாளுடன் இணைத்து தைக்கப்பட்டுள்ளதை நேரில் ஆய்வு செய்து உறுதி செய்துகொள்ள வேண்டும்.

ஒம்/–
இயக்குநர்